நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை - 5.

ந.க.எண்.12978/96/ஆர்1 நாள்: 8.5.96

வ.எண்/ 14629/96/அ, சுற்றறிக்கை

21 MAY 19

பொருள்: சொத்துவரி - நகராட்சிகள் - கேரளா மற்றும் இதர மாநிலங்களில் பதிவாகும் பத்திரங்களுக்கு 5% மிகுவரி வசூலித்துக் கொண்டு பெயர்மாற்றம் செய்தல் - அறிவுரை வழங்கப்படுகிறது.

--

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளில் சொத்துவரி பெயர்மாற்றத்திற்காக கேரளாவில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டால் நகராட்சிகளுக்குச் சேரவேண்டிய 5% மிகுவரியை பெற்றுக் கொண்டு சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய தக்க நடவடிக்கை-யினை தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மேற்கொள்ளவில்லையென தமிழக அரசின் பதிவாளர் (ப.தி.ஆ.பி ரெஜிஸ்ட்ரேஷன்) அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டில் பதிவு செய்யப்படும் மாநகராட்சி வரம்பிற்கு உட்படாத இதர பகுதிகளுக்கு விற்பனை ஆவணங்களுக்கு பதிவுக் கட்டணம் 7%-மும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கு முத்திரை செய்யப்படும் மிகுவரி 5% ஆக ரூ.100/- மதிப்பிற்கு ரூ.12/- வீதம் செலுத்தப்பட வேண்டும். கேரள மாநிலத்தில் பதிவாகும் தமிழ்நாட்டு ஆவணங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சேரவேண்டிய 5% மிகுவரியை கேரள மாநில அரசு வசூலிக்க முடியாது. ஆகையால், தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்பு-களுக்கு செலுத்தப்பட வேண்டிய மிகுவரியை ஏய்ப்பு செய்ய ஏராளமான ஆவணங்கள் கேரளாவில் பதிவாகி வருகின்றன. வீடுகள், மனை இடங்கள் விற்பனை செய்ய பதிவு செய்யப்படும் கேரள ஆவணங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சேரவேண்டிய 5% மிகுவரியை வசூலிக்காமல் பெயர்மாற்றம் செய்யப்படுகிறது. மதுரை மாநகராட்சியில் கேரளாவில் பதிவாகிய வீடு, மனை இடங்களுக்கு பெயர்மாற்றம் கோரி, தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களுக்குரிய 5% மிகுவரியை வசூலித்தும், வசூலிக்காத பெயர்மாற்ற வழக்குகளுக்கு உரிய அலுவலர்கள் மீது துறை நடவடிக்கை மேற்கொண்டும் இழப்புகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களே ஈடு செய்யுமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகளில் கேரளா மற்றும் இதர மாநிலங்களில் பதிவாகிய வீடு, மனை இடங்களுக்கு பெயர்மாற்றம் கோரி தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களுக்கு 5% மிகுவரியினை உடனடியாக வசூலிக்குமாறு அனைத்து ஆணையர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்குரிய 5% மிகுவரியை செலுத்தக் கோருவதுடன், செலுத்த மறுத்தால், அந்த ஆவணத்தை முத்திரைச் சட்டம் பிரிவு 33-ன்படி முடக்கம் செய்து வசூலிக்க வகை செய்யப்பட்டுள்ளதால் அதற்கான நடவடிக்கையும் எடுக்கலாம். எனவே, மேற்கூறியவாறு மிகுவரி 5%-ஐ உடனடியாக வசூலிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து நகராட்சி ஆணையர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தொடர்பான தமிழ்நாடு சட்டத் திருத்தம் சட்ட எண்.43/92-ன் (Tamil Nadu Act 43 of 1992) நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

4. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் தங்கள் மண்டலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் இவ்வாணை சரியான முறையில் கடைபிடித்து வசூல் செய்து வருகின்றார்களா? என்ற விபரத்தினையும் ஆவணங்களின் உண்மைத் தன்மையினையும் கண்காணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் மண்டலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும

மேற்படி 5% மிகுவரி இதுநாள் வரையில் எவ்வளவு வசூலிக்கப்பட்டுள்ளது? இதனை வசூலிக்க தற்போது அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரம் போன்றவற்றினைப் பெற்று 24.5.96-க்குள் தவறாமல் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு விரிவான அறிக்கை அனுப்ப வைக்க அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-எஸ்.ஜெயராமன்,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக,

பெறுநர்

அனைத்து நகராட்சி ஆணையர்கள்,

அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்:-

1. இவ்வலுவலக அலுவலர்கள்.
2. இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்கள் வைப்புக் கோப்பு
3. ஆர்-1 இருப்புக் கோப்பு
4. டி பிரிவு இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்.

ந.ம.9/5

## TAMILNADU GOVERNMENT GAZETTE EXTRAORDINARY

The following act of the Tamil Nadu Legislative Assembly received the assent of the President on the 27th August'92 and is hereby published for general information.

### Act No. 43 of 1992

In Act further to ammend the Indian Stamp Act 1899 in its application to the State of Tamil Nadu.

Be in acted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Forty third year of the Republic of India as follows:

Short title extent and commencement.

1. (1) This act may be called the Indian Stamp (Tamil Nadu Ammendment) Act 1992.

2. It extends to the hold of the State of Tamil Nadu.

3. It shall come into force on such date as the state Government may be notification appoint.

Central Act. II, of 1899

2. In the Indian Stamp Act 1899 (hereinafter referred to as the Principal Act) after section 19-A the following section shall be inserted, namely,

(insertion of new section 19-B)

"19-B payment of duty on copies, counterparts or duplicates when that duty has not been paid on the principal or original instrument(1) were any instrument is no registered in any part of India otherthan the State of Tamil Nadu and such instrument relates wholly or partly to any property situate in the State of Tamil Nadu, the copy of such instrument relates, wholly or partly to any property situate in the State of Tamil Nadu the copy of such instrument shall when received in the State of Tamil Nadu under the Registration Act 1908 (Central Act XVI of 1908) be liable to be charged with the difference of duty as on the original instrument.

2. The difference of duty shall be calculated having regard to:

a. the extent of property situate in the State of Tamil Nadu; and b. the proportionate consideration or v value or market value of such extent of property.

3. The Party liable to pay duty on the original instrument shall upon the receipt of notice from the registering Officer, pay the difference induty within the time allowed by such registering Officer.

4. Where deficiency in duty paid is noticed from the copy of any instrument the Collector may Sue mottu or on a reference from any court or any registering Officer, require the production of the original instrument before him within the period specified by his for the purpose of satisfying himself as to the adquancy of the duty paid thereon and the instrument so produced before the Collector, shall be deemed to have been produced or come before him in the performance of Section 47-A shall mutatis mutandis apply:

Provided that no action under this sub-section shall be taken after a period of 4 years from the date of registration of such instrument.

5. In case the original instrument is not produced within the period specified by the Collector he may require the payment of deficit duty if any together with penalty under section 40 on the copy of the instrument within such time as may be prescribed.

3. After Section 63 of the Principal Act the following section shall be inserted, namely:

| | |
|---|---|
| Insertion of new Section 63-A | "63-A Penalty for failure to comply with Provisions of Section 19-B |

Where the party fails to pay the difference of duty as required under sub-section (3) or Sub-Section(4) or any amount as required under sub-Section (5) of Section 19-B he shall be punishable with fine which may extend to five Thousand rupees.

//By Order of the Governor/

MD.ISMAIL,
Secretary to Government
Law Dept.

/True Copy/

SUPERINTENDENT.